கற்பகம் திங்கள் இதழ்
KATPAKAM
விலை ரூபா 10/-

**குறளமுதம்-34**

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

அதிகாரம்-4 -அறத்துப்பால்-அறத்தின் இன்றியமையாமை

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற"

ஒருவன் தன் மனத்தில் குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும். அதுவே அறம். மனத் தூய்மையற்ற பிற யாவும்(அறம் ஆகா) வீண் ஆரவாரத் தன்மையனவே ஆகும்..

மலர்-03 ஆகஸ்ட்-2010 இதழ்-34

# பனம் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு காண வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு!



பனம் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்கு பனை அபிவிருத்திச் சபையும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும். இத்தகைய இணைந்த செயற்பாடு ஒன்றின்மூலம் எமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு நாம் வழி செய்தவர்களாவோம் என்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசத்தால் நடத்தப்பட்ட 88வது சர்வ தேச கூட்டுறவுதின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவின்போது பனை அபிவிருத்திச் சபையின் ஆரம்பகாலத் தலைவர் அமரர் கே.சி.நித்தியானந்தா அவர்களின் திருவுருவப் படத்தினை திரைநீக்கம் செய்து படத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மலர்மாலை அணிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது,

கடந்தவருட இறுதிப் பகுதியில் நடைபெற்ற கூட்டுறவு பனந்தொழில் வல்[illegible]ர் மாநாட்டின்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்னால் நிறைவேற்றப்பட்டதாக சமாசத் தலைவர் இங்கு குறிப்பிட்டார். உண்மையில் அவர்கள் என்முன் வைத்த கோரிக்கைகள் யதார்த்தமானவை என்பதை உணர்ந்தே நான் அவற்றை அவர்களுக்கு நிறைவேற்றிக் கொடுத்தேன் என்று தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கூட்டுறவு அ.உ. ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் உரையாற்றும்போது,

பனை தென்னை வள அபிவிருத்திக் (2ம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுப் பணியாளர் ஓய்வூதியத்திட்ட நடைமுறை விதிக்கான அங்கீகாரம்!

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியத்திட்ட நடைமுறை விதிகளுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் யாழ். மாவட்ட ப.தெ.வ.அ.கூ.நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூ. சங்க தலைவர், செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள அங்கீகாரக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தங்களின் 18-08-2010ம் திகதிய கடிதம் சார்பாக,

தங்கள் சங்கத்தின் பணியாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை 01-07-2010ந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு 30-04-2010ம் திகதிய நெறியாளர் குழுவின் 08ம் இலக்க தீர்மானத்திற்கமையவும், 19-06-2010ம் திகதிய பொதுச்சபையின் 05ம் இலக்க தீர்மானத்திற்கமையவும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய அனுமதி வழங்கப்படுகிறது.

(7ம் பக்கம் பார்க்க)

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

" உடம்பின் சக்தியைத்தான் பலரும் பலம் என நம்புகிறார்கள். ஆனால் அசைக்கமுடியாத மன உறுதியே முழுமையான பலமாகும்." —அறிஞர்—

## கற்பகக்கரு

### பனை அபிவிருத்திச் சபையும் ப.தெ.வ.அ.கூட். சங்கங்களும்!

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியில் பனை, தென்னை வளம் சார்ந்த உற்பத்திகள் முக்கிய பங்கை வகித்து வருகின்றன.

பனை தென்னை வளத்திலிருந்து பெறப்படக்கூடிய அத்தனை மூலப்பொருட்களின்மூலமும் பல வகையான உற்பத்திகளை பனை அபிவிருத்திச் சபையும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் உற்பத்தி செய்து வருகின்றபோதும் இவற்றை சந்தைப்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

இச்சிரமங்களிலிருந்து விடுபடுவதற்கு ஏதுவாக பனை அபிவிருத்திச் சபையும், ப.தெ.வ.அ.கூ.ச.சமாசமும் இணைந்த பணிப்பாளர் சபை ஒன்றை முதல் முறையாக ஏற்படுத்தியிருப்பதன் மூலம் இவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது என்பதை பனந்தொழிலோடு ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் மறந்துவிடக்கூடாது.

ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன இணைந்து அண்மையில் சிறப்புற நடத்திய 88வது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள பசுபதி-சீவரத்தினம் உரையாற்றும்போது கூறிய கருத்துக்களை சங்கங்களும், கொத்தணிகளும், சமாசமும் செவிமடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

ப.அ.சபையைப் பொறுத்தவரையில் இதுவரை காலமும் தனது தலைமையகத்தை கொழும்பில் கொண்டிருந்தமையாலும், துறைசார் அங்கத்தவர்கள் பணிப்பாளர் சபையில் இடம்பெறாமையாலும் அவற்றின் செயற்பாடு மந்தமாகவே இருந்து வந்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

கடந்த வருடம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற பனந்தொழில் வல்லுநர் மாநாட்டின் கோரிக்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரும் முயற்சியின் பயனாக ப.அ.சபையின் பணிப்பாளர் சபையில் கூடிய அளவு துறைசார் வல்லுநர்கள் இடம்பெற்றுள்ளமையினாலும், அதனுடைய தலைமைச் செயலகம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்படுவதற்குரிய நடவடிக்கைகளில் அமைச்சர் ஈடுபட்டு அதில் வெற்றி கண்டுள்ளமையும் பனந்தொழிலின் அபிவிருத்திக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகரமான இந்நடவடிக்கைகள் பனை அபிவிருத்திச் சபையினதும் பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களினதும் பரந்தளவிலான உற்பத்திப் பொருள் முயற்சிகளுக்கும், அவற்றை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளமையை சங்கங்கள், கொத்தணிகள் என்பன நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கற்பகம் வலியுறுத்துவதுடன் அமைச்சரின் முயற்சிகளுக்கு தனது பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

*"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"*

—ஆசிரியர்—

### வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அங்கத்தவர், பணியாளர்களுக்கான

## சமூக பாதுகாப்பு நலத்திட்ட நடைமுறைவிதி

6 சென்ற இதழ் தொடர்ச்சி

### திடீர் விபத்து

அங்கத்துவ நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் எதிர்பாரதவிதமாக ஏற்படும் திடீர் விபத்துக்களால் தமது அவயவங்களை இழக்கும் அல்லது நிரந்தர இயலாமை அடையும் சந்தர்ப்பத்தில் உரிய உபகரணங்களை வழங்கி அவர்களையும் சமூகத்தில் வாழ உதவி புரிதல். ரூபா 10,000 தொடக்கம் ரூபா 25,000 வரை பெறுமதியான கொடுப்பனவு வழங்கல்.

### வெல்ல மானியம்

அங்கத்துவ நிறுவனங்களினால் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் வெல்ல உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக சங்கங்களுக்கு வெல்ல மானியம் வழங்கல். உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்திற்கு கிலோ ஒன்றுக்கு ரூபா 50 வழங்கல்.

### சித்தவைத்திய நடமாடும் சேவை உதவு தொகை வழங்கல்

யாழ் மாவட்ட சித்த மருந்துகள் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தால் எமது நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் மருத்துவ நடமாடும் சேவைக்கு நிதி உதவி புரிதல். மாதாந்தம் ஒரு சங்க நடமாடும் சேவைக்கு ஒரு தடவை மாத்திரம் ரூபா 5,000 வழங்கல்.

### இலகுகடன் நலத்திட்டங்கள்

**நவீன கிளை நிலையம் உருவாக்க உதவிபுரிதல்**

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தமது கிளை விற்பனை நிலையங்களை ஒரே மாதிரியான வடிவமைப்பிலும் மதுவரிச் சட்டங்களுக்கு அமைவாகவும் உருவாக்க சமாசம் வரைபடம், கட்டட மதிப்பீடு அத்தோடு ரூபா 1,000,000.00 தொடக்கம் ரூபா 2,500,000.00 வரையான இலகு கடன் வசதி செய்து கொடுத்தல்.

### பாம் கோப் சிற்றி நிலையம் உருவாக்கல்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்துள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சித்த வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் என்பன தமது எல்லைக்குட்பட்ட பொருத்தமான இடங்களில் பாம் கோப் சிற்றியை உருவாக்க ஆலோசனை, வடிவமைப்பு, வரைபடங்கள் வழங்குவதோடு, ரூ 500,000.00 வரையான இலகு கடன் வசதி செய்து கொடுத்தல்.

### வாகனக் கொள்வனவுக்கான உதவி

அங்கத்துவ நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களின் சுய தொழில் அபிவிருத்திக்கும், காணி, கட்டட, வாகனக் கொள்வனவுகளுக்கும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள் ஊடாக ரூ 100,000.00 தொடக்கம் ரூ 300,000.00 வரை இலகு கடன் வசதி செய்து கொடுத்தல் .

—வளரும்—

**பனம்...** 1ம் பக்க தொடர்ச்சி

கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களின் பலத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வருவதால் அவர்களால் எதனையும் சாதிக்க முடிகிறது. இச்சங்கங்கள் தங்களது அங்கத்தவர்களுக்கு விபத்து, ஓய்வூதிய நிதிகளை உதவுதொகையாக வழங்கி அவர்களின் பிற்கால வாழ்க்கையை வளம்பெறச் செய்து வருகிறார்கள். அத்துடன் ஒவ்வொரு சங்கமும் முன்பள்ளிகளை நடத்தி அவர்களுடைய கல்வியை மேம்படுத்தி வருவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்விழாவில் வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்தின் முன்னாள் தலைவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி-சீவரத்தினம், யாழ். மாவட்ட கூ.ச.தலைவர் அ.இராஜாராம், மா.கூ.அ.அலுவலர் த.பத்மானந்தன், வலிகாமம் கொத்தணியின் தலைவர் க.மெய்யழகன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

# பனைசார் உற்பத்தியில் மகளிரின் பங்களிப்பு!



88வது சர்வதேச கூட்டுறவுதின விழாவினை முன்னிட்டு வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம் நடத்திய மகளிர்குழு உறுப்பினர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற ந.சுபிதா [கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.] எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

"மங்கையராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" பெண் பிறப்பே பெருமைமிக்க பிறப்பாகும். பெண்களே மகளிர்களாக கருதப்படுகின்றார்கள். பெண்களே நாட்டின் விண்மீன்களாக திகழ்கிறார்கள். உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும்அளப்பரிய சேவைகளையாற்றி வருகின்றார்கள். எனவே பனைசார் உற்பத்தியில் மகளிர் பங்களிப்பு அதிகமாகவுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

ஒரு நாட்டின் மூலவளங்களும் மனித வளங்களும் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் போதே வளர்ச்சியடைவதாக கருதப்படுகின்றது. "பனையுள்ள நாட்டில் பஞ்சமில்லை", "பனையின்றி வாழ்வில்லை" என்பது முதுமொழியாகும்.

பனை வளங்களை தனியுரிமையாகக் கொண்ட பிரதேசங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அம்பாந்தோட்டை, திருமலை போன்ற பல்வேறு பிரதேசங்களில் சுமார் 60,650 ஏக்கர் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்றது. சாற்று உற்பத்தியில் 2% உம், உபஉணவு உற்பத்தியில் 2% உம் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பனை வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை ஏற்றுமதி செய்து வருவதை நாம் கண்ணூடாகக் காணுகின்றோம். பனையிலிருந்து கிடைக்கும் ஒவ்வொரு மூலப்பொருட்களையும் கொண்டு உற்பத்தி செய்வதற்காக மகளிர்குழு என்ற அமைப்பு தோற்றம் பெற்று இம்மகளிர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளு, பதநீர் தவிர்ந்த ஏனைய உபஉணவுகளும், பாவனைப் பொருட்களும் தரமான முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றினூடாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் பாவனைகள் அருகிச் சென்றுகொண்டிருந்தன.

இதற்கு, நவநாகரிக மோகங்களும், வெளிநாட்டுப் பாவனைப் பொருட்களின் வரவும், எமது அசமந்தப்போக்கும் காரணமாக அமைந்தது. இதனைக் கருத்தில் கொண்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர்குழு என்ற அமைப்பை தோற்றுவித்தன.

கிளை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பெண்கள் சங்கமட்ட பொதுச்சபைக்கு உள்வாங்கப்பட்டு நெறியாளர் குழுவிலும் தமக்கென ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இம்மகளிர்களால் உற்பத்தி



செய்யப்படும் பொருட்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்தப்பட்டதோடு, விற்பனை செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்துதரப்பட்டன.

பனை வளத்திலிருந்து தயாரிக்கப்படுகின்ற பொருட்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

பனாட்டு, பனம்பழப் பணியாரம், கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், சீனி, சர்க்கரை, கள், பதநீர், பாய், பெட்டி, தொப்பி, சுளகு, மற்றும் பல்வேறு வகையான அழகுசாதனப் பொருட்கள், கட்டுமானப் பணிகளுக்கான மரங்கள் போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

பனை வளங்கள் கற்பகம் என்றும் கற்பகதரு பொக்கிஷம் என்றும் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் பனையினுடைய மூலப்பொருட்களைக் கொண்டு பல்வேறு வகையான உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் சிறப்பம்சம் என்னவெனில் இவ் உற்பத்திகளில் அதிகமானவை பெண்களாலேயே மேற்கொள்ளப்படுவதுதான். உணவு உற்பத்தியில் பனம் விதை நடுவதிலிருந்து பானம் தயாரிப்பது, ஒடியல் தயார் செய்வது, கிழங்கு பிடுங்குவது, உணவு பதப்படுத்துவது போன்ற பல்வேறு செயற்பாடுகளிலும் மகளிர் முன்னின்று செயற்படுகிறார்கள். அதுமட்டுமல்லாது பனை ஓலையிலிருந்து கலைநயம்மிக்க மிக அழகிய பொருட்களை தயாரிப்பதில் முன்னோடியாக செயற்படுகிறார்கள்.

பனை மரத்திலிருந்து உருவாக்கப்படும் வீட்டுமர உருவாக்கத்திலும் மகளிர் ஒருங்கிணைந்து வேலை செய்கின்றார்கள். அவற்றிலிருந்து பகுதியாக எஞ்சியதை விறகாகப் பயன்படுத்துகின்றார்கள்.

மகளிரின் இவ்வாறான வினைத்திறனான செயற்பாடுகளுக்கு வழிகாட்டி, விழிப்புணர்வை ஊட்டிய பெருமை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களுக்கே உரியது. மகளிர் அமைப்புக்களூடாக பெண்களை ஒருங்கிணைத்து பனைசார் உற்பத்திக்கான பயிற்சிகளை வழங்கி தரமான உற்பத்திகளை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்து அவற்றினை காட்சிப்படுத்தியதோடு, ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

பனை வளங்கள் மனிதனின் இரு கண்களாக திகழ்கின்றன. வறிய மக்களின் ஜீவனோபாயத்திற்கு மிகவும் முக்கியமாக அமைந்தது. எத்தனையோ வறிய மக்களின் பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தது. நாட்டின் இன்றைய நிலையில் எமது பொருளாதாரத் தேவைகளை ஈடுசெய்வதற்கு ஈட்டும் வருமானம்

(07ம் பக்கம் பார்க்க)


விருந்தினர்கள் அழைத்துவரப்படுகின்றனர்.


அமரர் கே.சி.நித்தியானந்தாவின் திருவுருவப் படத்துக்கு அமைச்சர் மாலை அணிவிக்கின்றார்.











# 88 வது அனைத்துல
# கூட்டுறவுதின விழா






விருந்தினர்கள் பரிசில்கள் வழங்குகின்றன






அமைச்சருடன் முன்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்




விருந்தினர்கள் உரையாற்றுகின்றனர்



அமைச்சர் பரிசில்கள் வழங்குகிறார்

# ...ுலக
# ...ிழா–2010



88வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு வடமாகாண ப.நெ.வ. அ.கூ.ச.சமாசம் கடந்த 14–08–2010 அன்று சமாச மண்டபத்தில் நடத்திய கூட்டுறவுதின விழா நிகழ்வுகளின் தொகுப்பு இங்கே நிழல்களாக..........



...ங்குகின்றனர்



கௌரவிக்கப்பட்ட சமாச முன்னாள் தலைவர்கள் அமைச்சருடன்..







முன்பள்ளி மாணவர்களின் நடனம்



கூட்டுறவாளர்கள் மற்றும் பொதுமக்கள்

# கூட்டுறவை வலுவாக்குவோம்!



88வது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு சமாசம் நடத்திய பணியாளர்களுக்கான கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற யோ.தவராசா (கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்.) எழுதிய கவிதை இங்கே பிரசுரமாகிறது.

கவிப்போட்டியிதனைக்
கருத்துடன் நடாத்துகின்ற
சமாசத்து உறவுகளுக்கும்
அவைதனில் அமர்ந்துள்ள
அரங்க நடு நிலையாளர்களுக்கும்
அன்புடன் ஞான் கூறும்
அன்னைத் தமிழ் வந்தனங்கள்!

கூட்டுறவை வலுவாக்குவோம்
எமக்கிட்ட தலைப்பிது
வளமான கூட்டுறவை
வலுவாக்கும் தலைப்பினில்-ஞான்
யாத்து வந்த கவியிது
வளம் எனில் வாழ்த்துரைப்பீர்!

கூட்டுறவு...
பூவுலகின் மற்றுமொரு கற்பகதரு!
இல்லாதார் இயலாதார் எல்லோருக்கும்
இயன்றவரை வாரியிறைக்கும் பாரிவீடு
உழைக்கும் வர்க்கத்தின் உயர்ச்சிக்காய்
உற்றதுணை நிற்கும் வெளிச்சக்கூடு

கூட்டுறவுக் கொள்கைகள் ஏழும்
நாட்டுயர்வைக் காட்டி நிற்கும் உலக அதிசயங்கள்
ஓடப்பர் உயரப்பர் எனவெங்கள் பெரியப்பர்
ஓதிவைத்த பேதங்களை உடைத்து வைத்த
ஒப்பற்ற ஔடதமிந்தக் கூட்டுறவு!
பொருளாதாரச் சுமைகளால்
பொறி கலங்கிப் போயுள்ளோரை
கைப்பிடித்துக் கரைசேர்க்கும்
கலங்கரை விளக்கமிந்தக் கூட்டுறவு

போர்ச்சூழலினால்
பொலிவிழந்து கிடக்குமெங்கள்
பொருளாதார நிலையுயர
கூட்டுறவை வலுவாக்கி
கூடி ஒன்றாய் வாழ்ந்திடுவோம்!

படித்தோரை பட்டறிவுள்ளோரை
பட்டங்கள் பல பெற்ற மேதையரை-எங்கள்
வட்டத்துள் வரவழைத்துப் பல
திட்டங்கள் வகுப்போம்-தேவையெனில்
சட்டங்கள் செய்து-எங்கள்
கூட்டுறவை வலுவாக்குவோம்!

முன்பள்ளி முதற்கொண்டு
கணினி வரை கல்வியூட்டி-கன
கச்சிதமாய் வழிசமைத்தெங்கள்
சமுதாயம் மேன்மையுறத்
திட்டங்கள் தீட்டியெங்கள்
கூட்டுறவை வலுவாக்குவோம்!

துறைசார் பயிற்சிகளை
துல்லியமாய் வழங்கியெங்கள்
பனைசார் கூட்டுறவைப்
பாரினிற்கீடாய் வலுவாக்குவோம்!

சிக்கனம் சேமிப்பு
செயற்பாட்டில் திட்டமிடல்
கனவிலும் நினைவிலும்
கருத்தொடுமித்த விழிப்புணர்வு
இத்தனைக்கும் வித்திட்ட
எங்கள் கூட்டுறவை
என்றும் வலுவாக்குவோம்!

கல்விப் பயிற்சி
சமுதாயத்தில் பற்றுறுதி
பகிர்தல் உதவுதல்
ஒன்றுபடல் கூடி உழைத்தல்
என்பதுவாய் எங்கள்
பண்புகளை வளர்த்தெடுத்துக்
கூட்டுறவை வலுவாக்குவோம்!

பொருளாதாரத்தில் எம்நாடு
பொலிவிழந்து போனதால்
கருவிலுள்ள சிசுவும்கூடக்
கடனாளியாமே -விட்டுவிட முடியாது
மீட்டெடுக்க வேண்டுமெனில்
கூட்டுறவே கை கொடுக்கும்-எங்கள்
நாட்டுயர்வு வேண்டுமெனில்
கூட்டுறவை வலுவாக்குவோம்!

கூட்டுறவைப் பறைசாற்றி
பட்டி தொட்டி எங்கும் பரப்புரைத்து
பலபேரை உள்ளிணைத்துப்
பற்றுறுதி மிக்கவராய்
பக்குவமாய் அணி சேர்ப்பின்
கூட்டுறவு வலுப்பெறும்
நாட்டுயர்வு நலமாகும்!

## வினோதப் பொருள்!



அன்னையின் முகத்தில்
ஏக்கத்தைப் பார்க்கிறேன்
அம்மா என்றழைப்பதற்கு
என்னால் முடியவில்லை
எல்லோரிடமும் இனிமையாகப் பேச நினைத்தேன்
அதுகூட என்னால் முடியவில்லை
இயற்கையின் எழிலை ரசித்தேன்
அதை வார்த்தையால் வர்ணிக்கமுடியவில்லை
இத்தனைக்கும் காரணம்
நான் ஓர் வாய்பேச முடியாத ஊமை!
வேடிக்கை பார்ப்பவர்களுக்குமுன்
நான் ஓர் வினோதப் பொருளாக இருக்கிறேன்!

## பாசம்!



இரவு வந்தாலும் நிலவு விண்ணோடுதான்
இலை உதிர்ந்தாலும் மரம் மண்ணோடுதான்
பார்வை இழந்தாலும் இமை கண்ணோடுதான்
உயிர் பிரிந்தாலும் கொண்ட பாசம் மனதோடு...

செல்வி மதனரூபி-பாரதிதாசன்

# நிகழ்வுகளின் நிழல்கள் !

**சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் 2006, 2007, 2008, 2009ம் ஆண்டுகளுக்கான சிறந்த, ஓய்வுபெற்ற அங்கத்தவர் மற்றும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் விழா 16-08-2010ல் நடைபெற்றது. அந்நிகழ்வின் சில பதிவுகள்**



**பனைசார்** ....... 3ம் பக்க தொடர்ச்சி

போதாதுள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு வழிகாண வேண்டியிருந்த சூழலில் பனைசார் உற்பத்தியின் வருமானத்தைக் கேள்வியுற்ற பெண்கள் மகளிர் குழுக்களைத் தேடிச்சென்று தாமும் பயிற்சிபெற்று, உற்பத்தியில் பங்கேற்று உற்பத்திகளைப் பெருக்கியுள்ளார்கள். இதனூடாக அவர்கள் வருமானத்தைப் பெற்று தமது பிள்ளைகளின் கல்வி, உணவு, உடை போன்ற தேவைகளை நிறைவு செய்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக எத்தனையோ பெண்கள் கணவரை இழந்தும், உடன்பிறப்புக்களை இழந்தும் நிர்க்கதியாகி நிற்கின்றனர். இந்நிலையில் பெண்கள் மகளிர் குழுக்கள் ஊடாக பனைசார் உற்பத்தியில் பயிற்சியினைப் பெற்றதன் காரணமாக இத்தகைய குடும்பங்கள் பின்தள்ளப்படாது தராசுபோல் தூக்கிக் கொடுத்தது இப்பனைசார் உற்பத்திகளே ஆகும்.

தாம் கற்றுக்கொண்ட பயிற்சியினூடாக பனையிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களை பல்வேறு வகையான பயன்பாட்டு மற்றும் கலைப் பொருட்களாக்கி வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் இவர்கள், அதன் மூலம் தமது வாழ்வாதாரத் தேவைகளை குறிப்பிடக்கூடிய அளவுக்கு நிறைவாக்கிக் கொள்கின்றனர். இது அவர்களுக்கு ஒரு உற்சாகத்தையும் சொந்தக் காலில் நிற்க முடியும் என்ற தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. இது பனைசார் உற்பத்தியில் மகளிரின் பங்களிப்பு எதிர்காலத்தில் இன்னும் சிறந்து விளங்கும் என்பதை கட்டியும் கூறி நிற்கின்றது.

மகளிர்கள் நாம் கூடி மட்டில்லா ஆனந்தமாய் வாழ்ந்திட கெட்டியாகப் பிடித்துவிட்டோம் பனைசார் உற்பத்தியை. உயர்ந்திடுவோம் நாம், உயர்த்திடுவோம் பனை வளத்தை.

**கூட்டுறவு** .... 1ம் பக்க தொடர்ச்சி

01.மாதாந்தம் பணியாளர்களினால் செலுத்தப்படும் நிதி சேமிப்பு கணக்கில் இடுவதுடன் திரளும் நிதி நிலையான வைப்பிற்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

02. நிலையான வைப்பில் இருந்து பெறப்படும் வட்டி வருமானம் ஓய்வூதியத் தொகைக்கேற்ப மாதாந்தம் இதற்கான நடைமுறைக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டு இக்கணக்கின் ஊடாக ஓய்வூதியர்களின் சங்கங்களின் கிராமிய வங்கிக்கு காசோலை மூலமாக கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

03. நடைமுறை விதிக்கு மாறாக கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுதல் ஆகாது. மேலதிகமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் பொதுச்சபையின் தீர்மானத்துடன் எனது முன்னனுமதியும் பெறப்படுதல் வேண்டும்.

04. கொடுப்பனவுகள் யாவும் நடைமுறை விதிக்கு அமையவும் நெறியாளர்குழுத் தீர்மானத்துடன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தையும் பெற்று வழங்குதல் வேண்டும்.

05. தங்கள் சங்கத்திற்கு பொறுப்பாகவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் காலாண்டுக்கு ஒரு தடவை இத்திட்டம் தொடர்பான முன்னேற்ற அறிக்கையிடுதல் வேண்டும். எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 88வது கூட்டுறவுதின விழா போட்டி முடிவுகள்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் கொத்தணிகளும் இணைந்து நடத்திய 88வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவையொட்டி அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாணவர்கள் ஆகியோருக்கு நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, கவிதை, நடனம், மனனப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**அங்கத்தவர்-பேச்சுப் போட்டி:-**
1ம் இடம் செ.செல்வராசா(கோண்டாவில்), 2ம் இடம் பா.சுரேஸ்குமார்(அரியாலை),

**அங்கத்தவர்-கட்டுரைப் போட்டி:-**
1ம் இடம் பா. சுரேஸ்குமார்(அரியாலை), 2ம் இடம் செ.செல்வராசா(கோண்டாவில்)

**அங்கத்தவர்-கவிதைப் போட்டி:-**
1ம் இடம் சி.சின்னராசா, 2ம் இடம் செ.செல்வராசா, 3ம் இடம் சி.அருமைத்துரை-கோண்டாவில்

**பணியாளர்-பேச்சுப் போட்டி:-**
1ம் இடம் மா.கார்த்தீபன்(அச்சுவேலி), 2ம் இடம் கி.தவம் (மானிப்பாய்), 3ம் இடம் தா.தவச்செல்வன் (கோண்டாவில்)

**பணியாளர்-கட்டுரைப் போட்டி:-**
1ம் இடம் த.சுதாகரன் (கொடிகாமம்),
2ம் இடம் மு.நிதர்சன்,
3ம் இடம் த.அசோக் } அச்சுவேலி.

**பணியாளர்-கவிதைப் போட்டி:-**
1ம் இடம் யோ.தவராசா, 2ம்இடம் தா.தவச்செல்வன்-கோண்டாவில்,
3ம் இடம் கி.வரதராஜன்(அச்சுவேலி)

**மகளிர்குழு உறு.-பேச்சுப் போட்டி:**
1ம் இடம் ம.மன்றோமக்ரலின் (கோண்டாவில்), 2ம் இடம் பி.கௌசலாதேவி (மானிப்பாய்), 3ம் இடம் ந.சுபிதா (கோண்டாவில்)

**மகளிர் குழு உறு.-கட்டுரைப் போட்டி:**
1ம் இடம் ந.சுபிதா (கோண்டாவில்), 2ம் இடம் செ.சிவதர்சினி(சுன்னாகம்), 3ம் இடம் சா.மதிவதனா(மானிப்பாய்)

**மகளிர்குழு உறு.-கவிதைப் போட்டி:**
1ம் இடம் ந.சுபிதா, 2ம் இடம் ம.மன்றோமக்ரலின்-கோண்டாவில், 3ம் இடம் பி.கௌசலாதேவி(மானிப்பாய்)

**முன்பள்ளி மாணவர்- திருக்குறள் மனனப்போட்டி**
1ம் இடம் சு.லாவண்யா(அச்சுவேலி), 2ம் இடம் நா.துஸ்யந்தன்(கோண்டாவில்), 3ம் இடம் சி.துவிதா, ச.சாருஜா (தென்.கொத்.)

**முன்பள்ளி மாணவர்- குழுநடனப் போட்டி**
1ம் இடம் மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.ச.,
2ம் இடம் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.,
3ம் இடம் காரைநகர் ப.தெ.வ.அ.கூ.ச.

**சிறந்த சங்கத் தெரிவுப்போட்டி**
1ம் இடம் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.ச.,
2ம் இடம் கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.
3ம் இடம் பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.ச.

**கூடுதலான அங்கத்தவர்களை இணைத்துக்கொண்ட சங்கங்களுக்கிடையிலான போட்டி:-**
1ம் இடம் சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.ச.,
2ம் இடம் அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.ச.,
3ம் இடம் காரைநகர் ப.தெ.வ.அ.கூ.ச.

**சிறந்த கொத்தணி தெரிவுப்போட்டி**
1ம் இடம் வலிகாமம் கொத்தணி.
2ம் இடம் தென்மராட்சிக் கொத்தணி
3ம் இடம் வடமராட்சிக் கொத்தணி

## புதிய இயக்குனர் சபை தெரிவு!

யாழ்.மாவட்ட கூட்டுறவு பணியாளர் நலநோன்பு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிர்வாகம் கூட்டுறவு பணியாளர்களுக்கான மாதாந்த ஓய்வூதிய நடைமுறை விதி தயாரிப்பதற்கு இயக்குனர் சபையில் 5பேரை தெரிவு செய்திருக்கின்றது. இக்குழு விரைவில் அனைத்து உறுப்பினர்களுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளது.


"சமூகத்தின் எழுச்சிக்கும் விடிவுக்குமாக உதயமாகிய இக்கூட்டுறவு அமைப்பு அதன் வழியே சென்று அனைவருக்கும் விடிவெள்ளியாக அமைய வாழ்த்துகிறோம்"



எமது வழமையான செயற்பாடுகளுடன் தற்பொழுது கன்ரர் வாகன சேவையை வழங்குவதற்கும் நாம் தயாராகிவிட்டோம். வாகன தேவை கருதி எம்மை நாடும் சங்கங்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்க நாம் தயார்!

சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

மின்சார நிலைய வீதி, சுன்னாகம்


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2010ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது.